## தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

அரச நிதித் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

அரச நிதித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அரச நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 07 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் நி.பி. 66 - 69 ஏற்பாடுகளின் கீழ் 03 சதவீதம் முதல் 53 சதவீதம் வரை குறைத்தலும் மற்றும் 09 செலவு விடயங்களில் ஏற்பாடுகளில் 08 சதவீதம் முதல் 133 சதவீதம் வரை அதிகரித்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2020 ஆண்டின் மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் சேமிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட செலவு விடயங்களில் இருந்து நி.பி. 66 – வீரமொங் செயற்பாடுகளின் கீழ், நிதி ஏற்பாடுகள் போதியளவு காணப்படாத மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்களுக்காக நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட்டு 2020 ஆண்டிற்காக 245 செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை உச்சமட்ட அளவில் பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு செலவு விடயங்களிடையே | வருடாந்த மதிப்பீடுகள் தத்துரூபமாக மற்றும் ஆக்கபூர்வமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பாடுகளை மாற்றுவதற்கான காரணத்தை நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ – 2 (iii) படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென கருணையுடன் அறிவிக்க விரும்புகின்றேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 02 செலவு விடயங்களுக்காக பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத போதிலும், ஆண்டின் போது நி.பி. 66 மாற்றம் வீரமங் செயற்பாடுகளின் கீழ் ரூபா 1,441,400 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு புதிய செலவு விடயங்கள் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நி.பி. 66 ஏற்பாடுகளின் கீழ் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் மீது 245-01-01-00-1701 நட்டங்கள் மற்றும் பதிவழித்தல் செலவு விடயத்திற்காக ஏற்பாடுகள் மாற்றப்பட்டன எனவும் மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான WP NA – 2700 கொண்ட வான் வண்டி குறிப்பிட்ட காலப் பகுதியில் திருத்த வேலை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அதற்கான ஏற்பாடுகள் காணப்படாமையால் நி.பி. 66 – வீரமொங் செயற்பாடுகளின் கீழ் நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட்டு குறிப்பிட்ட திருத்த வேலை 2020 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதென கருணையுடன் அறிவிக்கின்றேன். | - மேற்படி - |

**2.2 பொறுப்புக்களை நெருங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 94(i) மற்றும் 01/2014 மற்றும் 2014 ஜனவரி 01 திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரிவு 6.4 இன் படி பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ள முன்னர் அதற்காக குறிப்பிட்ட செலவு விடயத்தின் போதியளவு ஏற்படுகள் இருப்பதனை உறுதிப்படுத்தப் படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான உறுதிப்படுத்தல் இன்றி 04 செலவு விடயங்களுக்காக ரூபா 160,222 இற்கான பொறுப்புக்களுக்கு நெருங்கியிருந்தது. கூட்டுத்தொகை ரூபா 201,087 தொகைக்கான | 2020 ஆண்டிற்கான உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவு, 1/3 படி, மேலதிக நேரப் படி மற்றும் 1/20 படி போலவே தொலைபேசிக் கட்டணம் மற்றும் ஏனைய வெளி நிறுவனங்களில் இருந்து அனுப்பியிருந்த பில் பத்திரங்கள் கணக்குப் பகுதிக்கு கிடைத்திருந்த முறைப் பிரகாரம் குறிப்பிட்ட ஏற்பாட்டு எல்லையுள் CIGAS முறைமையில் பொறுப்புக்கள் என உட்படுத்தப்பட்டிருந்தது. | நி.பி. களுக்கு இணங்க செயற்படுவதற்காக தேவையான வழிகாட்டல் மேற்கொள்ளல். |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்கள், நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020.12.31 திகதியுள்ளவாறு காணப்பட்ட சேமிப்பு ஏற்பாடுகளின் எல்லையை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகியிருக்காததுடன், 2020 ஆண்டிற்கான 2021 ஆண்டின் போது கிடைத்திருந்த உறுதிச் சான்றுகளுக்காக நி.பி. 115(2) மற்றும் (3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி 2021 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது செலுத்தப்பட்டிருந்ததென கருணையுடன் அறிவித்துக்கொள்கின்றேன். | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் வலைதளத்தின் 2020 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம், செயலாற்றல் அறிக்கை உட்படுத்தப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2021 மே 10 திகதி வரை 2019 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் மாத்திரம் உட்படுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக 2020 ஆண்டின் முதலாவது காலாண்டிலிருந்து திணைக்களத்தின் நாளாந்த அலுவல்களை நடாத்திச் செல்லல் வரையறுக்கப்பட்ட பதவியணியினரை கடமைக்கு அழைப்பதன் மூலமே ஆகும். எனவே, திணைக்களத்தின் வலைதளத்தை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என கருணையுடன் அறிவிக்கின்றேன். | வலைதளம் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியாகிய 78 பதவிகளில் 12 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதால் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 15 சதவீதமாக காணப்பட்டது. இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்ட மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ஆகிய 11 பதவிகளும் காணப்பட்டன. | நிதி அமைச்சின் மூலம் திறைசேரித் திணைக்களம் தொடர்பாக 2021 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட புதிய அமைப்புக் கட்டமைப்பிற்கு உரிய பதவியணி தொடர்பான இடமாற்ற செய்முறைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இந்த சிரேஷ்ட மட்டப் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சேவையின் தேவையினை கவனத்தில் எடுத்து திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை முறைப்பிரகாரம் நடாத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |